## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| **O.S. No. 16/2022** | **Date : 10.03.2026** | **PW1** |
| Name: சின்னம்மாள் | க/பெ.தங்கம் | |

**1 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

என் மாமனார் பெயர் வெங்கடாஜலம் என்றால் சரிதான். மாமியார் பெயர் இருசம்மாள் என்றால் சரிதான். இருசம்மாள் தனிப்பட்ட முறையில் சோளத்தட்டு வியாபாரமும், தானிய வியாபாரமும் செய்து வந்தார் என்றால் சரியல்ல. என் மாமனார் தான் செய்தார். என் கணவர் டிபன் கடை நடத்தி வந்தார் என்றால் சரிதான். என் மாமனார் சேலம் மார்க்கெட்டில் மூட்டை தூக்கும் தொழிலாளியாக இருந்து வருகிறார் என்றால் ஆரம்பத்தில் செய்து வந்தார். அதன்பிறகு சோளத்தட்டு வியாபாரம் செய்து வந்தார். 1 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகள் சக்திவேலின் வாரிசுகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் கணவர் சக்திவேல் என்பவரை கொலை செய்துவிட்டனர் என்றால் சரிதான். அதன்பிறகு 1 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகள் எனது மாமியாரின் ஆதரவில் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் சுயமாகவும் சம்பாதித்து வந்தனர். அதனால்தான் என் மாமியார் தனக்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு நிலத்தை வீடு கட்டி குடியுள்ளார் என்றால் சரியல்ல. ஏற்கனவே கட்டியிருந்த வீட்டை வாங்கிதான் அதில் வாழ்ந்து வந்தார். மேற்படி வீட்டில்தான் 1 முதல் 4 பிரதிவாதிகள் குடியிருந்து வந்தனர் என்றால் சரியல்ல. சக்திவேலின் மகன்கள் கொத்தனார் வேலைக்கு செல்கின்றனர் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் சுயமாக சம்பாதித்து சித்தாயி காட்டில் உள்ள வீட்டை விலைக்கு வாங்கினார்கள் என்றால் சரியல்ல. என் மாமனார் தான் அதை வாங்கினார். என் மாமியார் தனிப்பட்ட முறையில் எந்த சம்பாத்தியமும் செய்யவில்லை. மேற்படி சொத்து 1983ம் வருடம் என் மாமியாருக்கு கிரய வகையில் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 5வது பிரதிவாதி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறைவில் இருந்தார் என்றால் சரிதான். அவர் சிறையில் இருந்து வந்தபிறகு அவருக்கு போக்கிடம் இல்லை என்பதால் அவருக்கு ஒரு இடம் தானமாக எழுதப்பட்டது என்றால் சரிதான். அதில் எங்களுக்கும் பங்கு உள்ளது. இருசம்மாளுக்கு சுயமாக பாத்தியப்பட்ட சொத்தை 5ம் பிரதிவாதிக்கு தானமாக எழுதிக்கொடுப்பதற்கு சட்டத்தில் இடம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மாமனார் சம்பாதித்து வாங்கிய சொத்து என்பதற்கு ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது மாமனாரின் வாரிசு சான்றிதழ்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எனது மாமனார் பெயரில் உள்ள எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 6 விதமான சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆறுவிதமான சொத்துக்களுக்குண்டான சக்குபந்தி குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை

என்றால் அது பற்றி தெரியாது. நான் மேற்படி சொத்துக்களுக்கு உண்டான நீள அகலத்தை குறிப்பிடவில்லை என்றாலும் உத்தேசமாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. எங்களுக்கும் 5 ம் பிரதிவாதிக்கும் உள்ள தனிப்பட்ட விரோதத்திற்காக அனைவரையும் தரப்பினர்களாக சேர்த்து பாகம் கேட்டு வழகது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கில் சொல்லியுள் 5 மற்றும் 6 அயிட்ட சொத்துக்கள் குறித்து எந்த பரிகாரமும் சட்ட ரீதியாக கேட்கமுடியாது என்றால் சரியல்ல. 5 வது அயிட்ட சொத்து சீரங்கம்மாள் என்பவர் என் மாமியாரிடம் தனிப்பட்ட முறையில் விலைக்கு வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. ஏமாற்றி வாங்கியுள்ளார்கள். சொத்து யாருக்கு பாத்தியம் என்ற எந்த விவரமும் இல்லாமல் பொதுவாக கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் 1 முதல் 4 வரையுள்ள அயிட்ட சொத்துக்கள் குறித்து தான் கேட்கமுடியும் என்றாலும் 5, 6 அயிட்ட சொத்துககள் குறித்து நான் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. 5, 6 அயிட்ட சொத்துக்கள் குறித்து நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>6 மற்றும் 7 வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

6, 7 பிரதிவாதிகள் என் கணவரின் தங்கைகள் என்றால் சரிதான். என் கணவருக்கு தாவா சொத்தில் என்ன உரிமையுள்ளதோ அது 6, 7 பிரதிவாதிகளுக்கும் உள்ளது என்றால் சரிதான். தாவா குறித்து 6, 7 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து தீர்ப்பாவதில் எனக்கு எந்தவித ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை –இல்லை**

ஒம்/–சின்னம்மாள்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு
சார்பு நீதிபதி,
மேட்டுர்.